**கவனிக்க** .- *2015.01.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : தொகுதி (I), பகுதி I : தொகுதி II (அ), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1901 - 2015 පෙබරවාරි මස 06 වැනි සිකුරාදා - 2015.02.06**

*1901 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 426 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | 428 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 430 |


**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி V இல் அச்சீட்டாளர் மற்றும் பிரசுரிப்பாளர்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் பதியப்பட்டுள்ள, 2012 ஆம் வருடத்தின் காலாண்டின் (ஏப்பிறல்-யூன்) அச்சிடப்பட்டுள்ள புத்தகப்பட்டியலொன்று ஆங்கில மொழியில் மட்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பஸ்கொட பிரதேச சபை

(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி பஸ்கொட பிரதேச சபையினால் 2014.11.13 ஆந் திகதி நடத்தப்பட்ட விஷேட சபைக் கூட்டத்தில் கீழே அட்டவணையில் குறித்த 3 ஆம் இலக்க பிரேரணை ஏற்றுக் கொண்டதாக பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

மஹிந்த ஈஸ்வரகே,
தவிசாளர்,
பஸ்கொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்.
பஸ்கொட,
2014, நவெம்பர் 3.

### அட்டவணை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (நியதி கட்டளைச்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண சபை உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொறுப்பமைச்சரால் அமைக்கப்பட்டதும், 2013.05.17 ஆந் திகதிய 1811 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாண சபையினால் அனுமதித்துள்ளதாக 2014.08.29 ஆந் திகதிய 1878 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், ஏற்றுக்கொள்ளப் பட்ட துணைவிதிகளில் IV தொடக்கம் XXIX வரையிலான தொகுதிகளை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஏற்றுக்கொண்டு செயற்படுத்தப்படவென மேற்குறித்த உள்ளூராட்சி நிறுவன (மேலதிக துணைவிதி) கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் பஸ்கொட பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

iv. மீன் விற்பனை தொடர்பான மேலதிக துணை விதி
v. இறைச்சி விற்பனை தொடர்பான மேலதிக துணைவிதி
vi. குளிர்பான கைத்தொழிலகம் தொடர்பான மேலதிக துணைவிதி
vii. முடி தயாரிக்கும் நிலையம் சிகை அலங்கரிப்பு சலூன் மணமகள் அலங்கரிப்பு தொடர்பான மேலதிக துணைவிதி
viii. வெதுப்பகம் தொடர்பான மேலதிக துணைவிதி
ix. பாற்பண்ணை தொடர்பான மேலதிக துணைவிதி
x. நீச்சல் தடாகம் தொடர்பான மேலதிக துணைவிதி
xi. ஐஸ் கைத்தொழிலகம் தொடர்பான மேலதிக துணைவிதி
xii. சாப்பாட்டுக்கடை சிற்றுண்டிச்சாலை, தேயிலைக் கோப்பி கடை தொடர்பான மேலதிக துணைவிதி
xiii. ஹோட்டல் தொடர்பான மேலதிக துணைவிதி
xiv. தரிப்பிடங்கள் தொடர்பான மேலதிக துணைவிதி
xv. சலவையகம் தொடர்பான மேலதிக துணைவிதி
xvi. கைத்தொழிலகம் தொடர்பான மேலதிக துணைவிதி
xvii. மரணச்சடங்குகள் சேவை வழங்கும் நிலையம் தொடர்பான மேலதிக துணைவிதி
xviii. நடமாடும் வியாபாரிகளினால் உணவுப் பண்டங்கள் விற்பனை தொடர்பான மேலதிக துணைவிதி
xix. பாதசாரி கடவை தொடர்பான மேலதிக துணைவிதி
xx. கட்டிட அமைப்புப் பொருட்கள் தொடர்பான கைத்தொழில் நிலையம் மற்றும் அமைப்புப் பொருட்கள் களஞ்சிய நிலையம் ஒழுங்குபடுத்தல் பார்வையிடல், நிர்வகித்தல் தொடர்பான மேலதிக துணைவிதி
xxi. வாகனம் நிறுத்தல், ஒழுங்குபடுத்தல் தொடர்பான மேலதிக துணைவிதி
xxii. வீதிகளை பழுதுபார்த்தல், வீதிகளின் போக்குவரத்திற்கு தடை புரிதலைத் தடுத்தல் தொடர்பான மேலதிக துணைவிதி
xxiii. தகன அறை ஒழுங்குபடுத்தல், நிர்வகித்தல் கட்டணம் அறவிடல் தொடர்பான மேலதிக துணைவிதி
xxiv. பொதுச் சந்தை தொடர்பான மேலதிக துணைவிதி
xxv. விளையாட்டு மைதானம் தொடர்பான மேலதிக துணைவிதி
xxvi. சமூக சாலைகள் தொடர்பான மேலதிக துணைவிதி
xxvii. விளம்பர அறிவித்தல் தொடர்பான மேலதிக துணைவிதி
xxviii. அடகு மற்றும் அடகு வைப்பாளர்கள் தொடர்பான மேலதிக துணைவிதி
xxix. தவணை அறிக்கை மற்றும் தகவல்கள் முன்வைத்தல் தொடர்பான மேலதிக துணைவிதி

2-12

---

## திஹகொட பிரதேச சபை

(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் வழங்கப்பட்டுள்ள

அதிகாரத்தின்படி திஹகொட பிரதேச சபையினால் 2014.11.26 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் 07 (i) இன்படி கீழே அட்டவணையில் குறித்த பிரேரணையை ஏற்றுக்கொண்டதாக பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

நிர்மால் சமரசிங்க,
தவிசாளர்,
திஹகொட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்.
திஹகொட,
2014, திசெம்பர் 10.

**அட்டவணை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (நியதி) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) அத்தியாயத்தினால் வாசிக்கப்பட்டதும் 261 ஆவது அதிகாரத்தின் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண சபை உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொறுப்பமைச்சரால் அமைக்கப்பட்டதும், 2013.05.17 ஆந் திகதிய 1811 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், தென் மாகாண சபையினால் அனுமதித்துள்ளதாக 2014.08.29 ஆந் திகதிய 1878 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், ஏற்றுக்கொள்ளப் பட்ட துணை விதிகளில் I தொடக்கம் XXIX வரையிலான தொகுதிகளை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏற்றுக்கொண்டு செயற்படுத்தப்படவென மேற்குறித்த உள்ளூராட்சி நிறுவன (மேலதிக துணைவிதி) கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் திஹகொட பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

i. ஆம் பகுதி :- அனைத்து மேலதிக துணைவிதிகளுக்கும் ஏற்ப விளக்கம் தொடர்பான மேலதிக துணை விதி

ii. ஆம் பகுதி :- அனைத்து துணைவிதிகளுக்கும் ஏற்ப பொது ஒழுங்குவிதிகள் தொடர்பான மேலதிக துணைவிதி

iii. ஆம் பகுதி :- ஏதாவது மேலதிக துணைவிதியின் ஒழுங்குகள் மற்றும் விதிகள் போன்றவற்றை மீறுதல் தொடர்பாக தண்டனை வழங்கும் மேலதிக துணைவிதி

iv. ஆம் பகுதி :- மீன் விற்பனை தொடர்பான மேலதிக துணைவிதி

v. ஆம் பகுதி :- இறைச்சி விற்பனை தொடர்பான மேலதிக துணைவிதி

vi. ஆம் பகுதி :- குளிர்பான கைத்தொழிலகம் தொடர்பான மேலதிக துணைவிதி

vii. ஆம் பகுதி :- முடி தயாரிக்கும் நிலையம் சிகை அலங்கரிப்பு சலூன் தொடர்பான மேலதிக துணைவிதி

viii. ஆம் பகுதி :- பேக்கரி தொடர்பான மேலதிக துணைவிதி

ix. ஆம் பகுதி :- பாற்பண்ணை தொடர்பான மேலதிக துணைவிதி

x. ஆம் பகுதி :- நீச்சல் தடாகம் தொடர்பான மேலதிக துணைவிதி

xi. ஆம் பகுதி :- ஐஸ் கைத்தொழிலகம் தொடர்பான மேலதிக துணைவிதி

xii. ஆம் பகுதி :- சாப்பாட்டுக்கடை சிற்றுண்டிச்சாலை, தேயிலை, கோப்பி கடை தொடர்பான மேலதிக துணைவிதி

xiii. ஆம் பகுதி :- ஹோட்டல் தொடர்பான மேலதிக துணைவிதி

xiv. ஆம் பகுதி :- தரிப்பிடங்கள் தொடர்பான மேலதிக துணைவிதி

xv. ஆம் பகுதி :- சலவையகம் தொடர்பான மேலதிக துணைவிதி

xvi. ஆம் பகுதி :- கைத்தொழிலகம் தொடர்பான மேலதிக துணைவிதி

xvii. ஆம் பகுதி :- மரணச்சடங்குகள் சேவை தொடர்பான மேலதிக துணைவிதி

xviii. ஆம் பகுதி :- நடமாடும் வியாபாரிகளினால் உணவுப் பண்டங்கள் விற்பனை தொடர்பான மேலதிக துணைவிதி

xix. ஆம் பகுதி :- நடைபாதை தொடர்பான மேலதிக துணைவிதி

xx. ஆம் பகுதி :- கட்டிட அமைப்புப் பொருட்கள் தொடர்பான கைத்தொழில் மற்றும் அமைப்புப் பொருட்கள், களஞ்சியம் ஒழுங்குபடுத்தல் பார்வையிடல், நிர்வகித்தல் தொடர்பான மேலதிக துணைவிதி

xxi. ஆம் பகுதி :- வாகனம் நிறுத்தல், வாகனம் ஒழுங்குபடுத்தல் தொடர்பான மேலதிக துணைவிதி

xxii. ஆம் பகுதி :- வீதிகளை பழுதுபார்த்தல், வீதிகளின் போக்குவரத்திற்கு தடை புரிதலைத் தடுத்தல் தொடர்பான மேலதிக துணைவிதி

xxiii. ஆம் பகுதி :- தகன அறை ஒழுங்குபடுத்தல், நிர்வகித்தல் கட்டணம் அறவிடல் தொடர்பான மேலதிக துணைவிதி

xxiv. ஆம் பகுதி :- பொதுச் சந்தை தொடர்பான மேலதிக துணைவிதி

xxv. ஆம் பகுதி :- விளையாட்டு மைதானம் தொடர்பான மேலதிக துணைவிதி

xxvi. ஆம் பகுதி :- சமூக சாலைகள் தொடர்பான மேலதிக துணைவிதி

xxvii. ஆம் பகுதி :- விளம்பரங்கள் தொடர்பான மேலதிக துணைவிதி

xxviii. ஆம் பகுதி :- அடகு மற்றும் அடகு வைப்பாளர்கள் தொடர்பான மேலதிக துணைவிதி

xxix. ஆம் பகுதி :- தவணை அறிக்கை தகவல் முன்வைத்தல் தொடர்பான மேலதிக துணைவிதி

# துணை விதிகள்

## பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தினுள் நுளம்புகளை மற்றும் நோய் பரப்பிட வல்ல கிருமிகளை அழித்தொழித்திடல் தொடர்பான துணை விதிகள்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 ஆவது பிரிவினால் பரிந்துரைக்கப்பட்ட மேற்படி சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (IX) ஆவது உப பிரிவின் (அ) என்ற பந்தியில் நுளம்புகள் மற்றும் நோய்கள் பரப்பிடவல்ல கிருமிகளை அழித்தொழித்திடவுமான துணைவிதிகளை அமுல்படுத்திட பிரதேச சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (உரிய துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் பிரகாரம் இந்த துணைவிதியினை ஏற்றிடவும் கொலொன்ன பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தில் செயலாற்றிட வேண்டுமெனவும் 2013, மாச்சு மாதம் 27 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரேரித்து நிறைவேற்றப்பட்டது.*

பீ. எச். ஆர். டி தயாபத்திரன,<br>
தவிசாளர்,<br>
கொலொன்ன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,<br>
கொலொன்ன,<br>
2014, ஒற்றோபர் 29.

1. இத்துணை விதிகள் கொலொன்ன பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தில் நுளம்புகள் மற்றும் நோய் பரப்பிடும் கிருமிகள் பரவுவதை தடுத்திடவும் அழித்திடவும் நிர்வாகப் பிரதேச சுற்றுச் சூழலின் தன்மையினை மேலோங்கிடச் செய்வது, தொற்று பரவிடும் நோய்கள் பரவுவதை தடுத்திடவல்ல துணைவிதிகள் என மொழியப்படுகிறது.

2. கொலொன்ன பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தில் யாதுமொரு நபர் ஏதுமொரு சுற்றுச்சூழலில் நுளம்புகள் மற்றும் நோய்கள் பரப்பிட வல்ல கிருமிகள் பரவுதல் மற்றும் விருத்தியடைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திடல், ஏற்படுத்திட வசதிகளை செய்திடல், அவ்வாறு இடம்பெற இடமளித்தல் ஆகாது.

3. நுளம்புகள் மற்றும் நோய் பரப்பிட வல்ல கிருமிகளை அழித்தொழித்திட பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தில் சகல முயற்சிகளையும் செய்திடல்.

(i) சகல திறந்தவகைப் பேணிகள், போத்தல்கள், பெட்டிகள், பிளாஸ்டிக் கொள்கலன்கள், டயர்கள், சிரட்டைகள், இளநீர்க் கோதுகள் உட்பட நீர் தேங்கிவிடக்கூடிய பொருட்கள், உபகரணங்கள் மற்றும் கொள்கலன்கள் போன்றவற்றை அப்புறப்படுத்திட அல்லது அழித்தொழித்திட அல்லது அவ்வாறு செய்திட வகை செய்திட வேண்டும்.

(ii) தங்குமிடம் அல்லது தங்குமிடல்லாத கட்டிடங்களின் மழை நீர் வழிந்தோடும் பொறிகள், கீழ் நோக்கிய நீர்க்குழாய்கள் மற்றும் வீட்டுத் தோட்ட சாக்கடை வடிகால்களை முறையாக நடாத்திடச் செய்தல் மற்றும் அவற்றிலுள்ள இடைத்தடங்கல்களை இடைவிடாது பரிசீலனைக்குட் படுத்தி நிவர்த்தி செய்திடல்.

(iii) தங்குமிடம், அல்லது தங்குமிடல்லாத சுற்றுச் சூழலிலுள்ள எல்லாவித நீர்த் தாங்கிகள், நீர் நிலைகள், குட்டைகள், நீரைத் தேக்கி வைத்திருக்கும் வேறு பாவனைப் பொருட்கள் சிறப்பு மிகுந்தவையாகவும், நடைமுறைப் புத்தாக்கச் சேவை சிறப்பாக நடாத்திச் செல்வதற்காகவும், அவற்றில் நுளம்புகளோ, கிருமிகளோ பரவுவதிலிருந்து பாதுகாத்திட வல்ல தடுப்புகளை ஏற்படுத்திடவும், அவற்றில் நுளம்புகளோ, கிருமிகளோ பரவுவதைத் தடுத்திடும் தன்மையில் வைத்திடுவதும், நுளம்புகள், கிருமிகள், உயிரினங்கள் பரவுவதை தடுப்பதற்குரிய கருமங்களைச் செய்திட வேண்டும்.

(iv) சுற்றுச் சூழலிலுள்ள எல்லாக் கிணறுகளையும், சிறந்த நிலையில் நடாத்திச் செல்வதோடு நுளம்புகள், நோய் பரப்பிடும் கிருமிகள் பரவுவதைத் தடை செய்திடும் நிலமைகளை நடாத்திச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

(v) நீரை அப்புறப்படுத்தக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள ஏதும் செயற்கைத் தடாகங்கள் இருப்பின் உரியவர்கள் வாரத்தில் ஒரு முறையாவது அவற்றின் நீரை அப்புறப்படுத்தி சுத்தம் செய்திட வேண்டும்.

(vi) வீட்டுத் தோட்டத்தில் மற்றும் காணியில் அமைந்துள்ள வடிகால், சாக்கடைகளில் வழிந்தோடும் நீர் சேர்ந்து குட்டைகள் உருவாகிடாதவாறு அன்றாடம் அவற்றைப் பரிபாலித்திடல் வேண்டும்.

(vii) உணவுத் தேவைக்காகவும், அலங்காரத்திற்காகவும் வளர்க்கப்படுகின்ற செடி வகைகளைத் தவிர்த்து ஏனைய புதர்கள், காடுகள் பயிர்கள் மற்றும் மரங்கள் போன்றன மனித சஞ்சார கட்டிடங்கள் சுற்றுச் சூழலின் 5 மீற்றருக்குள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தல் வேண்டும்.

(viii) சகல கற்குழிகளும், மாணிக்கக் கற்குழிகளும், களிமண்பெறப்பட்ட குழிகளும் அத்தோடு வேறு தேவைகளுக்காக அமைக்கப்பட்ட குழிகள் யாவும் நீர் தேங்கி நிற்காதவாறு நடாத்திச் செல்லல் வேண்டும்.

(ix) நீர் தங்கிவிடக் கூடிய வகையில் வளர்த்திடும் அலங்காரத்திற்கான செடிகள், நீர்ப்புல்லினங்கள், பாசிப்படைகள், யானைக் கால் நோயைப் பரப்பிடும் பாசிப்படைகள் போன்ற நீர்ச் செடி வகைகள் நுளம்புகள் மற்றும் கிருமிகள் வளர்ந்திட வழி வகை செய்யும் வேறு செடி வகைகளும், பூண்டுகளும் அப்புறப்படுத்தப்பட்டு அழித்தொழிக்கப்பட வேண்டியதோடு மேற்படி செடி வகைகள் நீர்வழிகளால் அடித்துச் செல்லப்படுவதைத் தடுத்திடவல்ல தடைகளைக் கட்டமைத்து அவை பரவிடாமல் தடுத்திட வேண்டும்.

(x) மலகூடங்கள், குட்டைகள், நீர் வற்றிடும் குட்டைகள், முத்திரையிடப்பட்ட குழிகள் மற்றும் அவற்றின் சுற்றுச் சூழலில் அமைந்துள்ள மலகூடங்கள் யாவும் நுளம்புகள் பரவிடாதவாறு நடாத்திச் செல்லப்பட வேண்டும்.

(xi) மயானங்களில் மற்றும் இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஸ்தூபிகளில் நீர் தேங்கி நிற்காதவாறு நிர்மாணித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. பிரதேச சபை தவிசாளரால் அல்லது அவரது எழுத்துமூல அங்கீகாரம் பெற்ற யாதுமொரு அதிகாரியால் வேண்டிய தினங்களில் மு. ப. 6.00 மணி முதல் பி. ப. 6.00 வரையிலான வேளைகளில் ஏதுமொரு சுற்றுச்சூழலுக்கும் உட்சென்று பின்வரும் காரணிகளை உறுதிப்படுத்திடக் கூடியவாறு சுற்றுச்சூழலைப் பரிசீலித்திடவும் அதிகாரம் பெறுகிறார்:-

(i) உரிய சுற்றுச் சூழலில் நுளம்புகள், மற்றும் கிருமிகள் பரவிடும் வாய்ப்புகள் உண்டா என்றும்;

(ii) உரிய சுற்றுச் சூழலின் குடியிருப்பாளர் இத்துணை விதிகளின் விதிமுறைளைப் பின்பற்றியுள்ளாரா என்றும்;

(iii) உரிய சுற்றுச் சூழலில் நுளம்புகள் பரவுவதை தவிர்த்திடவும், அவற்றை அழத்தொழித்திடவும் ஏதும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பின், அந்த நடவடிக்கைகள் எவ்வாறானது என்றும்;

(iv) உரிய சுற்றுச் சூழலில் கிருமி நாசினி தெளித்திடல் வெற்றிகரமாக இடம்பெற்றுள்ளதா என்றும்.

5. (i) தவிசாளரினால் அல்லது அவரினால், நடவடிக்கைகள் நிமித்தம் எழுத்துமூல அங்கீகாரம் வழங்கப்பட்ட அதிகாரியினால் ஏதும் சுற்றுச்சூழலில் பரிசீலனையின் பின்னரான விடயத்தில் உரிய சுற்றுச் சூழலில் நுளம்புகள் அல்லது நோய் பரப்பிட வல்ல கிருமிகளை அழித்தொழித் திடவும் அவை விருத்தி பெற்றிடுவதை கட்டுப்படுத்துவ தற்கான காரியகருமங்களை எழுத்து மூலமாக சுற்றுச் சூழலின் உரிமையாளர்களுக்கும், வதிவிட வாசிகளுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட முடியும்.

(ii) இந்த துணை விதிகளின் (1) ஆவது பந்தியின் பிரகாரம் அறிவித்தல் கொடுக்கப்பட்ட யாதுமொரு வதிவிடவாசி அல்லது சுற்றுசூழல் உரிமையாளர் உரிய அறிவித்தலில் தீர்க்கமாக வரையரை செய்யப்பட்ட காலத்தினுள் நியமித்தபடி செயலாற்றிட வேண்டும்.

6.(i) தவிசாளரின் எழுத்து மூல அனுமதியின்றி ஏதும் சுற்றுச் சூழல் உரிமையாளர் அல்லது வதிவிடவாசியானவர் கிணறொன்றை அமைத்திடல் அல்லது நீர்த் தாங்கியொன்று, கேணியொன்று, நீர்த்தொட்டியொன்று, பூமழைப் பொறியொன்று அல்லது நீரைச் சேமித்திட வல்ல, அல்லது நீர்த் தேங்கிட வல்ல வேறு பொறிமுறைகளை நீர் மாணிக்கலாகாது.

(ii) இத்துணை விதியின் (1) ஆவது பந்தியிலுள்ள விதிமுறை களுக்கு முரணாக ஏதும் நிர்மாணங்கள் அமைத்திடும் போது தவிசாளரினால் உரிய இடத்தின் உரிமையாளர் அல்லது வதிவிட வாசிக்கு பாரப்படுத்திடும் எழுத்துமூல உரிய அறிவித்தலினால் வரையரைப்படுத்தப்பட்டுள்ள கால எல்லையிலும் குறித்த கிணறு, நீர்த்தாங்கி, கேணி, நீர்த்தாங்கி, பூமழைப் பொறி அல்லது நியமிக்கப்படும் பொருட்களாகக் கொண்டு நிறைத்து/மூடிவிடவேண்டு மென்றோ வேறு வகைக் கட்டமைப்பில் அழித்து விட வேண்டுமென்றோ அல்லது உரிய காலத்தினுள் குறித்த அறிவித்தலில் உள்ளவாறான அவற்றை மாற்றியமைத்திட உத்தரவு வழங்கிடலாம்.

7. (i) 5 ஆவது அல்லது 6 ஆவது துணை விதிகளின் பிரகாரம், அறிவித்தலொன்று ஏதும் சுற்றுச்சூழல் உரிமையாளருக்கு அல்லது வதிவிடவாசிக்கு தனிப்பட்ட முறையில் ஒப்படைத்தல் அல்லது அவ்வறிவித்தலை குறித்த இடத்தில் தெளிவாகத் தெரியக் கூடிய வகையில் ஒட்டிடல் அல்லது ஒப்படைத்தல் வேண்டும்.

(ii) ஏதும் சுற்றுச் சூழலின் பங்குதார உரிமையாளர் இருவர் அல்லது அதற்கு மேல் உரிமையுடமையுள்ள சந்தர்ப்பத்தில் அவ்வுரிமையாளர்களில் ஒவ்வொரு உரிமையாளரும் 7 (1) என்ற துணை விதிகள் மற்றும் 5 ஆவது துணைவிதிகளின் கீழ் அவர்களில் யாதுமொருவருக்க பெற்றுக்கொடுக்கப்படுகின்ற அறிவித்தலில் நியமங்களை செயற்படுத்துவது தொடர்பாக ஏதும் மறுதலிடத்திடல் அல்லது செயற்படாதிருந்திடல் பற்றி தனித்தனியாக பொறுப்புக் கூறிட வேண்டும்.

(iii) 5 ஆவது அல்லது 6 ஆவது துணை விதிகளின் கீழ் அறிவித்தலொன்றைப் பெற்றுக்கொண்ட ஏதுமொரு சுற்றுச்சூழலில் உரிமையாளர் அல்லது வதிவிட வாசியினால் குறித்த அறிவித்தலில் வரையறுத்துள்ள காலத்தினுள் அவ்வறிவித்தலின் கட்டளைகள் செயற்படுத்திடுவதை மறுத்திட்ட சந்தர்ப்பங்களில் தவிசாளரால் அல்லது உரிய நடவடிக்கைகளுக்காக தவிசாளரால் அனுமதி வழங்கப்பட்ட வேறு அதிகாரி ஒருவரால் வேண்டிய தினங்களில் மு. ப. 6.00 மணி முதல்

பி. ப. 6.00 மணி வரையுள்ள காலத்தில் தேவைக் கேற்றதான உதவியாளரக்ள் மற்றும் சேவகர்களோடு உரிய சுற்றுச் சூழலுக்கு உட்புகுந்து அவ்வறிவித்தலில் அறிவுறுத்தப்பட்ட கருமங்களை செயற்படுத்திடல் அல்லது செயலாற்றிடச் செய்திடல் அல்லது செயற்படுத்திட வகை செய்திட முடியும்.

(iv) ஏதும் சுற்றுச்சூழலில் உரிமையாளர் அல்லது வதிவிட வாசிக்கு 5 ஆம் துணை விதிகளின் கீழ் ஒப்படைக்கப்பட்ட அறிவித்தலுல் அறிவுறுத்தப்பட்ட ஏதும் காரியமொன்று அல்லது காரியங்கள் தவிசாளர் மூலம் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரியொருவரால் அமுல்படுத்திய போது அல்லது அமுல்படுத்திய பின்னர் அல்லது காரியங்களை அமுல்படுத்திட பிரதேச சபைக்கு ஏற்பட்ட செலவை உரிய இடத்தின் உரிமையாளர் அல்லது வதிவிடத்தவர் பிரதேச சபைக்குச் செலுத்திவிட வேண்டும். தவிசாளரால் தனது ஒப்பமிட்டு இது விடயமாக எழுத்து மூலமாக விடுவிக்கப்படும் வேண்டுகோளை 14 தினங்களுக்குள் உரிமையாளர் அல்லது வதிவிடத்தவர் பிரதேச சபைக்குச் செலுத்திவிட வேண்டும். அத்துடன் வரையரைக் காலத்தினுள் உரிய கட்டணமாகச் செலுத்தப்படாவிடின் பிரதேச சபைச் சட்டவாக்கின் VIII ஆவது பிரிவின் பிரகாரம் விதிமுறைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

8. இத்துணை விதிகளின் ஏதும் விதி முறைகளை மீறிடும் எந்தவொரு நபரும் பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் குற்றவாளியாவார்.

9. பதப்பிரயோகம் தொடர்பாகவன்றி இத்துணை விதிகளின் பிரகாரம் ''சபை'' என்பது கொலொன்ன பிரதேச சபை என்றும், ''தவிசாளர்'' என்பது கொலொன்ன பிரதேச சபையின் தவிசாளர் பதவியினை வகித்திடுபவர் என்றும், ''செயலாளர்'' என்பவர் கொலொன்ன பிரதேச சபையில் பதவி வகித்திடுபவர் என்றும் கருத்துக் கொள்ளப்படுகிறது.

10. இத்துணைவிதிகளின் பிரகாரம் உரிமையாளர் என்பவர் நிர்வாகப் பிரதேசத்தில் ஏதும் ஒரு வீட்டின், வியாபார நிலையத்தின், கட்டிடத்தின் உரிமையாளர், வாடகைக்காரர் அல்லது ஏதும் சுற்றுச் சூழலின் கூலிக்காகவோ அன்றி பயிர்ச் செய்கைக்கு ஏதோ வகையில் உரிமை கொண்டவர் என்று கருத்துக் கொள்ளப்படும்.

11. இத்துணைவிதிகளின் பிரகாரம் வதிவிடவாசி என்பவர் கொலொன்ன பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தின் யாதுமொரு சுற்றுச்சூழலில் வதிவிடத்தவர் அல்லது வேறு ஒருவர் பிரதிநிதியாகவோ அல்லது அவ்விடத்தின் பொறுப்புதார முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் செய்திடும் நபராவர் என்பவராவர்.

12. இத்தகைய விதிகளில் சுற்றுச் சூழல் என்று கூறப்படுவது பிரதேச சபை நிர்வாகப் பிரதேசத்தில் ஏதும் வீடு, கட்டிடம் அல்லது நிர்மாணிக்கப்பட்டு பாவனைக்குட்படுத்தப்பட்ட அல்லது கைவிடப்பட்ட கிணறு, கப்பல் கொள்கலன் அல்லது கைவிடப்பட்ட வாகனம் போன்றவையாவதோடு கேணி, நீர்த்தொட்டி, குளம், நீர்வழிகள், சாக்கடைகள் மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளும் உட்படுகின்றன.

13. இத்துணைவிதிகளில் அதிகாரம்பெற்ற அதிகாரியானவர் என்பவர் தவிசாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட கொலொன்ன பிரதேச சபையின் யாதுமொரு அதிகாரியோ, சேவகரோ ஆவார்.

14. இத்துணை விதிகளின் பிரகாரம் நோய் பரப்பிடும் கிருமிகள் மற்றும் நுளம்புகள் என்பவற்றுடன் மற்றும் கிருமிகளும் எனக் கருதப்படும்.

2-168

## நானாவித அறிவித்தல்கள்

**கம்பஹா மாநகர சபை**

தீக்காப்புச் சான்றிதழ் வழங்கல்

1989.01.10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி (ஆ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நியம தீயணைப்பு சேவைகள் இடைக்கால பிரமாணங்களின் 2 ஆம் பகுதியில் உள்ள தீ முன்னாயத்த பாதுகாப்பு என்ற பிரிவில் தொழிற்சாலைகள், கடைத்தொகுதிகள், அலுவலகங்கள், மருத்துவமனைகள் நடாத்திச் செல்வதற்காக வருடாந்த தீச்சான்றிதழொன்றை உரிய உள்ளூராட்சி நிறுவனத்தினூடாக பெற்றுக்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கவர்ச்சியற்ற மற்றும் அபாயகரமான வியாபாரங்கள் பகிரங்க ஆற்றுகைகள் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவும் வருடாந்தம் தீக்காப்புச் சான்றிதழ் அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கேற்ப பின்வரும் வியாபார நிலையங்கள் வருடாந்தம் தீக்காப்புச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகர ஆணையாளர்,
கம்பஹா மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கம்பஹா.

**வியாபார நிலையங்கள்**

**அபாயகரமான கைத்தொழில்கள்**

1. பட்டு அல்லது செயற்கை துணி உற்பத்தி
2. மரக் குற்றிகள் மற்றும் பலகை களஞ்சியங்களை நடாத்திச் செல்லல்.
3. அச்சுப் பதிப்பகங்களை நடாத்திச் செல்லல்.
4. இயந்திரங்கள் மூலம் துணி உற்பத்தி செய்தல்
5. பலகைகள் தயாரித்தல் அல்லது பதனிடுதல்
6. இயந்திரங்கள் மூலம் மரக்குற்றிகள் கிழிக்கும் ஆலைகளை நடாத்திச் செல்லல்.
7. தும்புகள் மற்றும் வேறு வகையான தூரிகைகள் மூலம் பொருட்கள் தயாரித்தல், களஞ்சியப்படுத்தல்.
8. துணி அச்சுப்பதித்தல் அல்லது சாயமிடும் நிலையமொன்றை நடாத்திச் செல்லல்.
9. மோட்டார் வண்டி போர்ட் தயாரிக்கும் நிலையமொன்றை நடாத்திச் செல்லல்.
10. உலோகப் பட்டறைகள் நடாத்திச் செல்லல்.
11. மோட்டார் வாகன சேர்விஸ் செய்யும் அல்லது பழுதுபார்க்கும் நிலையங்களை நடாத்திச் செல்லல்.
12. வெட்டப்பட்ட தேங்காய் தயாரிக்கும் நிலையங்கள்.
13. தேயிலை பெட்டிகள் அல்லது பலகைப் பெட்டிகள் உற்பத்தி அல்லது களஞ்சியப்பெட்டிகள் உற்பத்தி அல்லது களஞ்சியப்படுத்தும் நிலையங்களை நடாத்திச் செல்லல்.
14. பஞ்சு அல்லது பருத்திப்பஞ்சு களஞ்சிய சாலைகள் நடாத்திச் செல்லல்.
15. தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யும் நிலையங்கள்.
16. இயந்திரங்கள் மூலம் அல்லது வேறு முறைகள் மூலம் மரக்கறி எண்ணெய் உற்பத்தி செய்தல்.
17. பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் கனிய எண்ணெய்கள் களஞ்சியசாலைகள்.
18. நிறப் பூச்சுக்கள், வார்ணிஸ் அல்லது டிஸ்டம்பர் இரண்டு அந்தர்களுக்கு மேல் களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்யும் இடங்கள்.
19. தூரிகைச் சாயங்கள் உற்பத்தி செய்யும் இடங்கள்.
20. அமில வகைகள் உற்பத்தி செய்யும் இடங்கள்
21. இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தி நடாத்தப்படும் தொழற்சாலைகள்.
22. எரிபொருள் நிரப்பு நிலையங்கள்.
23. பூரணப்படுத்தப்பட்ட ஆடைகள் பினிசிங் தொழிற்சாலையொன்றை நடாத்திச் செல்லல்.
24. ஏற்றுமதிக்காக தயாரிக்கப்படும் ஆடை தொழிற்சாலைகள்.
25. கொப்பரா களஞ்சியசாலைகள்.
26. இயந்திரங்கள் மூலம் துணிகள் நெய்யும் தொழிற்சாலைகள்.
27. பொலித்தீன் பேக் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.
28. தோல்/துணிகள் மூலம் பேக்குகள், பாதணிகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.
29. தனியார் மருத்துவமனைகள்.
30. நுளம்புச் சுருள் உற்பத்தி.
31. உழவு இயந்திரங்கள் ஒன்றிணைத்தல் தொழிற்சாலை.
32. இயந்திரங்கள் மூலம் உலோகங்களை தூளாக்குதல் அல்லது உருக்குதல்.
33. வெடி பொருட்களை களஞ்சியப்படுத்தல்.
34. திரை அரங்குகள் (சினிமா தியேட்டர்கள்).
35. மரத்தளபாட காட்சி அறைகள்.
36. இயந்திர தட்டச்சு நிலையங்கள்.
37. நிறப்பூச்சு வியாபார நிலையங்கள் மற்றும் களஞ்சியசாலைகள்.
38. சவர்க்கார உற்பத்தி நிலையங்கள்.
39. மதுபானம் அல்லது பியர் விற்பனைக்காக உணவகங்களை நடாத்திச் செல்லல்.

**பாதிப்பான கைத்தொழில்கள்** :

1. வீட்டுதளபாட உற்பத்திகள் அல்லது களஞ்சியசாலைகள்.
2. விடுதிகளை நடாத்துதல்.
3. ஜாம் அல்லது பழரசங்கள் தயாரிக்கும் நிலையங்கள்.
4. கரி உற்பத்திக்காக விறகு/சிரட்டைகள் எரித்தல் அல்லது கரிகளை களஞ்சியப்படுத்தல்.
5. ஒட்டுப்பசை தயாரிப்பு, களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல்.
6. இறப்பர் உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல்.
7. சிரட்டைகளை களஞ்சியப்படுத்தி வைத்தல்.
8. புதிய அல்லது பழைய டயர்களை களஞ்சியப்படுத்தல்.

9. பழைய சாக்குகள், பொலித்தீன் பேக்குகளை நவீனமயப்படுத்தி களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல்.
10. இறப்பர் மூல தூரிகைகள் உற்பத்தி செய்யும் நிலையங்கள்.
11. எண்ணெய் ஆலைகளை நடாத்திச் செல்லல்.
12. வாகன உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்தல்.
13. ஆடைத் தொழிற்சாலைகள்.
14. பணம் அறவிடும் தனியார் ரியூசன் வகுப்புகள் மற்றும் தனியார் பாடசாலைகள்.

மேற்குறிப்பிட்ட வியாபார நிலையங்களிலிருந்து வருடாந்த கட்டணத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதறகாக சதுர அடி என்ற அடிப்படையில் கட்டணமுறையொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

**கட்டண முறை**

| உரிய இடத்தின் நிலப்பரப்பு | ஒரு சதுர அடிக்கு அறவிடப்படும் பணம் ரூபா | |
|---|---|---|
| 1000 ச. அடி வரை | 100 0 | |
| 1001 - 3000 ச. அடி வரை | 150 0 | |
| 3001 ச. அடிக்கு அப்பால் | 5000 0 | ரூபா நிரந்தரக் கட்டணம் |

2 - 84

---

**எலஹெர பிரதேச சபை - பகமுன**

கைத்தொழில் வரி விதித்தல் - 2015

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் எலஹெர பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட பிரதேச சபைக் கூட்டத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

அமரவங்ச மொஹொட்டிகே,
தவிசாளர்,
எலஹெர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
எலஹெர
2014, நவெம்பர் 28.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எலஹெர பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் எலஹெர பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள ஏதும் ஒரு வளவுக்குள் நடாத்திச் செல்லப்படுகின்ற இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கைத்தொழில்கள் சம்பந்தமாகவும் இந்த அட்டவணையின் II ஆம் பிரிவில் உள்ள குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில் அனுமதிப்பத்திர வரியை 2015 ஆம் ஆண்டுக்கு நியமித்து அறவிடப்படல் வேண்டும் என்றும் குறிப்பிட்ட வரித் தொகையினை 2015 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் நியமித்து அறவிடப்படல் வேண்டும் என்றும், கௌரவ பிரதேச சபை அங்கத்தவர் திரு. சமிந்த கருணாரத்ன அவர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரணையினை கௌரவ பிரதேச சபை அங்கத்தவர் திரு. கித்சிறி பண்டார அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் சபையினால் நிறைவேற்றப்பட்டது.

**அட்டவணை**

| | நிரல் *I* வர்த்தகத்தின் தன்மை | நிரல் *II* இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 750 க்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் | ரூபா 750 க்கு மேல் எனினும் ரூபா 1,500 மேற்படாத சந்தர்ப்பத்தில் | ரூபா 1,500 க்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1 | பலசரக்குச் சாமான்கள் மொத்த வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2 | பலசரக்குச் சாமான்கள் சில்லறை வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 500 0 | 1,000 0 |
| 3 | பலசரக்குச் சாமான்கள் நடமாடும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 500 0 | 1,000 0 |
| 4 | குரோசரி பொருட்கள் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5 | சாப்புச் சாமான்கள் மற்றும் மணிப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6 | துணிவகைகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையம் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7 | தைத்த உடைவகைகளை விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8 | உடைகள் தைக்கும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 500 0 | 1,000 0 |
| 9 | துணிகளுக்கு வர்ணம் பூசும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10 | டென்ட் துணிகள் உற்பத்தி - செய்தல் மற்றும் விற்பனை வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11 | கடிகாரங்கள் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12 | கடிகாரங்கள் பழுதுபார்க்கும் தொழில் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13 | வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் உட்பட மின் உபகரணங்கள் விற்பனை நிலையத்துக்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14 | வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் உட்பட மின் உபகரணங்கள் பழுதுபார்க்கும் நிலையத்துக்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 15 | உருக்கினாலான வீட்டுத்தளபாடங்கள் உற்பத்தி செய்யும் இடத்தை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16 | உருக்கினாலான வீட்டுத்தளபாடங்கள் விற்பனை செய்யும் இடத்தை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 17 | கேஸ் விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 18 | துவிச்சக்கர வண்டிகள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19 | துவிச்சக்கர வண்டிகள் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 500 0 | 1,000 0 |
| 20 | துவிச்சக்கர வண்டிகளின் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 21 | மோட்டார் சைக்கிள்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 22 | மோட்டார் சைக்கிள்கள் உட்பட அனைத்து வாகனங்கள் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 23 | துவிச்சக்கர வண்டிகள் உட்பட அனைத்து வாகனங்களின் உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 24 | மோட்டார் சைக்கிள் வண்டிகள், முச்சக்கர வண்டிகள், உட்பட அனைத்து வாகனங்களும் சேர்விஸ் செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 25 | கை டிரக்டர்கள் விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26 | கை டிரக்டர்கள் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27 | டிரக்டர் வண்டிகளுக்கு (டேலர்) பெட்டிகள் தயாரிக்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |

| | நிரல் I<br>வர்த்தகத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 750 க்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் | ரூபா 750 க்கு மேல் எனினும் ரூபா 1,500 மேற்படாத சந்தர்ப்பத்தில் | ரூபா 1,500 க்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 28 | டயர் மற்றும் ரியூப் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29 | டயர் மற்றும் ரியூப் மாற்றும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 30 | ஒட்டுதல் (வேல்டின்) வேலை தளம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31 | உருக்கிலான பொருட்கள் உருவாக்கும் இயந்திரம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32 | அச்சகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33 | கணினி உட்பட உதிரிப்பாகங்கள் விற்பனை செய்யும் இடத்தை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34 | கணினி பயிற்றுவிக்கும் பயிற்சி நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 35 | பற்றரிகளுக்கு மீள் மின்வலு ஊட்டும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 36 | பற்றரிகள் விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37 | திறப்பு வெட்டுதல் மற்றும் பெயர்ப் பலகைகள் தயாரிக்கும் வர்த்தக நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 38 | விவசாய உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 39 | விவசாய உபகரணங்கள் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40 | விவசாயத்துக்கான விதை வகைகளை விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41 | விவசாய இரசாயனப் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 42 | பசளை வகைகள் விற்பனை வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 43 | வெற்றுப் பீப்பாய்கள், சாக்குகள். பழைய இரும்புகள், போத்தல்கள் ஒன்று சேர்க்கும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 44 | விறகு மடுவம் அல்லது விறகு விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 45 | கன்றுகள் நாற்று மேடை அல்லது கன்றுகள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 46 | விழாக்களுக்கான தளபாடங்கள் வாடகைக்கு விடும் இடம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47 | விழாக்களுக்கான தளபாடங்கள் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 48 | ஒலிபெருக்கிக் கருவிகள் மின் உற்பத்தி இயந்திரங்கள் வாடகைக்கு விடும் இடம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49 | கனிப்பொருள் எண்ணெய் வகைகள் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50 | விழாக்களுக்கான மண்டபங்களை வாடகைக்கு விடும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 51 | சோதிட சேவை செய்யும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 52 | உடற்கட்டு மேம்பாட்டு பயிற்சி நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 53 | பந்தயம் பிடிக்கும் (குதிரைப் பந்தயம்) நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 54 | பூசைப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |

| நிரல் I<br>வர்த்தகத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|
| | ரூபா 750 க்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | ரூபா 750 க்கு மேல் எனினும் ரூபா 1,500 மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | ரூபா 1,500 க்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
| 55 ஊது பத்திகள், சவர்க்காரம், மெழுகுவர்த்திகள், உற்பத்தி செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 56 காளான் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 57 பலசரக்குப் பொருட்கள், மிளகாய்த் தூள், உட்பட கடிவாய்ப்பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 58 யோகட் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 59 கண்ணாடி விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 60 படங்களுக்க சட்டம் போடும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 61 பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 62 அலுமீனியப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 63 பித்தளைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 64 தோற்பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 65 பிரம்பிலான பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 66 பீ. வீ. சீ. குழாய்கள் மற்றும் நீர்த்தாங்கிகள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 67 பாதணிகள் விற்பனை செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 68 பாதணிகள் பழுதுபார்க்கும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 69 செங்கற்கள் உற்பத்தி செய்யும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 70 குஷன் வேலை செய்யும் இடம் ஒன்றை ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 71 நிறுவை மற்றும் அளவை உபகரணங்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 72 வீடியோ நாடாக்கள் மற்றும் ஒளிப்பதிவு நாடாக்கள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 73 கையடக்க தொலைபேசிகள் பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 74 கையடக்க தொலைபேசிகள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 75 மூக்குக் கண்ணாடிகள் விற்பனை நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 76 கையால் இயக்கும் இயந்திரங்களினால் துணிகளை தைக்கும் வர்த்தகம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 77 மரணச் சடங்குகளை நடத்தும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |
| 78 லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யும் விற்பனை கூடம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு | 500 0 | 750 0 | 1,000 0 |

| | நிரல் I<br>வர்த்தகத்தின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்த பெறுமதி | | |
|---|---|---|---|---|
